# ம.தி.தா இந்துக் கல்லூரியில்
# வணிகப் பொருட்காட்சி மற்றும் விற்பனை

ம.தி.தா இந்துக் கல்லூரி, வணிகவியல்துறை ஏற்றுமதி இறக்குமதி மேலாண்மை தொழில்சார் கல்வி சார்பில் மாநில அளவிலான வணிகப் பொருட்காட்சி, சமூக விழிப்புணர்வு கண்காட்சி, குறும்படம் மற்றும் கல்லூரிகளுக்கு இடையிலான போட்டிகள் நடைபெற்றன. கல்லூரி கல்விச் சங்கப் பொருளாளர் திருமிகு. ப.த. சிதம்பரம் அவர்கள் கண்காட்சியை திறந்து வைத்து தலைமை உரையாற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் சே. சுப்பிரமணியன் வாழ்த்துரை வழங்கினார். தூய சவேரியார் கல்லூரி மேலாண்துறை உதவிப் பேராசிரியர் திருமதி. S. சரளாலெட்சுமி அவர்கள் சிறப்புரை வழங்கினார். மாணவர்களின் சொந்த முயற்சியில் தயாரித்த தயாரிப்புகள் இரண்டு நாட்கள் காட்சிபடுத்தப்பட்டு விற்பனை நிகழ்ந்தது. ஜான்ஸ் கல்லூரி பேராசிரியர் முனைவர். ஜானீஸ் பிபியானா கல்லூரிகளுக்கு இடையே நிகழ்ந்த போட்டிகளுக்கு நடுவராக செயலாற்றினார். நிகழ்வின் நிறைவு விழாவிற்கு மீனாட்சி ஹோண்டா மேலாண் இயக்குநர் திருமிகு. டால்டன் நிறைவுரையாற்றினார்.

நிழ்வினை C.O.P. ஒருங்கிணைப்பாளர் முனைவர். ந. சங்கரகோமதி, வணிகவியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் சு. முத்துலெட்சுமி, செல்வி சு. பிச்சம்மாள் ஆகியோர் ஏற்பாடு செய்ந்திருந்தனர், துறைத்தலைவர், முனைவர் ப. பாலசுப்பிரமணியன், துறைப்பேராசிரியர் முனைவர். சு. ராஜு, திரு. வ.ச.சங்கர், முனைவர். மு. செல்லத்துரை, திரு. A. பாதாளம் மற்றும் பிறதுறை பேராசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டு நிகழ்வினைச் சிறப்பித்தனர்.